**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்,**
**அரண்வாயல் குப்பம்**
**திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**



**சுற்று மடல் எண்: 92** **நாள்: 03.03.2022**

என் பாசத்துக்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.**

22 வது பொதுப் பேரவை வழியாக நமக்கும் சபைக்கும்
இறையருளைக் கொண்டுவரும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறீர்கள்.
அதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

**இந்த சுற்றுமடல் நம் பொதுப்பேரவையின் முக்கிய அம்சமான**
**பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியை**
**செவ்வனே ஆற்ற வழிகாட்டுதலோடு அனுப்பப்படுகிறது.**

பேரவை உறுப்பினர் தேர்ந்தெடுப்பது பற்றி
சபை ஏற்பாடுகள் என்ன குறிப்பிடுகிறதோ
அதைத் தவிர வேறு எதையும் குறிப்பிட நான் விரும்பவில்லை.
காரணம் இதைப்பற்றி நாம் நன்கு அறிந்திருக்கிறோம்.
ஒன்றை மட்டும் நினைவூட்ட விழைகிறேன்.
**ஆண்டவரின் பிரசன்னத்தில் நம் சுயவிருப்பு வெறுப்புகளுக்கு அப்பால்**
**அவர் திட்டத்தின்படி மட்டுமே இச்செயல் நடைபெறவேண்டும்**
**என்று உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.**

## 22 வது பொதுப் பேரவைக்கு தேர்தல் வழி உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் முறை

நமது 22 வது பொதுப் பேரவைக்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் விதம் பற்றி நமது 4-வது சிறப்புப் பொதுப் பேரவையில் நம் சபை ஏற்பாடுகள் எண் 116 §2 மாற்றம் பெற்றது. அதன் அடிப்படையில் **ஒவ்வொரு பொதுப்பேரவையும் அடுத்த பொதுப் பேரவைக்கான உறுப்பினர் தேர்வு பற்றித் தீர்மானிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.**

அதன்படி 21-வது பொதுப் பேரவையில் செய்யப்பட்ட தீர்மானம் பின்வருமாறு:

- **22 வது பொதுப் பேரவைக்கு 24 பேருக்கு நான்கு சகோதரிகள் பொதுப் பேரவை உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்படுவார்கள். (21. பொ.பே.கொள்கை 10)**

  இதன்படி 4-வது சிறப்புப் பொதுப்பேரவையில் தீர்மானித்தபடியே பேரவை உறுப்பினர் தேர்வு நடைபெறும்.

**1. பொதுப்பேரவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்:**

**<u>நிரந்தர வார்த்தைப்பாட்டுச் சகோதரிகள்:</u>**

**நிரந்தர வார்த்தைப்பாட்டுச் சகோதரிகள்** சபையில் வார்த்தைப்பாடு கொடுத்த கால வரிசைப்படி இருபத்து நான்கு பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள். **ஒவ்வொரு குழுவிலிருந்தும் நான்கு பேர் பொதுப்பேரவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.** (நான்காவது சிறப்புப் பொதுப் பேரவையின் கொள்கை பக்கம் 19, எண் 6.1.0)

சகோதரிகளை இருபத்து நான்குபேர் கொண்ட குழுக்களாகப் பிரித்த பின்பு **மீதியிருப்போர் இருபத்து நான்கு பேருக்குக் குறைவாக இருந்தால் கீழ்காணும் முறை பின்பற்றப்படும்:**

1. ஆறும் அதற்குக் குறைவாக இருந்தால் ஒருவர்.
2. ஏழு முதல் பன்னிரெண்டு வரை இருந்தால் இருவர்.
3. பதிமூன்றும் அதற்கு அதிகமாகவும் இருந்தால் மூவர்.

**2. பொதுப்பேரவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்:**

**<u>தற்காலிக வார்த்தைப்பட்டுச் சகோதரிகள்:</u>**

**தற்காலிக வார்த்தைப்பாட்டுச் சகோதரிகள்** சபையில் வார்த்தைப்பாடு கொடுத்த காலத்தின் வரிசைப்படி இருபத்து நான்கு பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள். **ஒவ்வொரு குழுவிலிருந்தும் இருவர் பார்வையாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களுக்கு வாக்களிக்க உரிமை இல்லை.**

தற்காலிக வார்த்தைப்பாட்டுச் சகோதரிகளை இருபத்து நான்குபேர் கொண்ட குழுக்களாகப் பிரித்த பின்பு, **மீதியிருப்போர் இருபத்து நான்கு பேருக்குக் குறைவாக இருந்தால் ஒருவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார். இவருக்கு வாக்களிக்க உரிமை இல்லை.**

**பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட தகுதிகள்: (சபை ந. மு. விதிகள் எண் *104 §1*)**

1. வயதிற்கேற்ற துறவற முதிர்ச்சி, மனித பண்புகள்.
2. பிரச்சனைகளை ஆழமாகப் புரிந்து கொண்டு அவற்றிற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்கும் திறன்.
3. தன் கருத்துக்களை விவேகத்துடனும் துணிவுடனும் தெளிவுடனும் அன்புடனும் வெளியிடும் ஆற்றல்.
4. அறிவுக் கூர்மையோடு தொலை நோக்குப் பார்வையுடன் திட்டங்கள் தீட்டுவதற்கான எண்ணங்களையும் கருத்துக்களையும் பரிந்துரைக்கும் திறன்.

மேற்கூறிய நம் சபையின் ஏற்பாடுகள், நடைமுறை விதிகள், பொதுப் பேரவைக் கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் உறுப்பினர் தேர்வு நடைபெற வேண்டும்.

**உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்:**

- ❖ முதலில் சுற்றறிக்கை வாசிக்கப்பட்ட அன்றே இல்லத்தின் அனைத்து சகோதரிகளும் கலந்து கொள்ளும் ஒரு நாளைத் தீர்மானிக்க வேண்டும்.

- ❖ ஒரு வேளை ஏதாவது மிக முக்கிய அலுவல் காரணமாக சகோதரிகள் யாராவது வெளியில் சென்றிருந்தால் தொடர்பு கொண்டு அவர்களும் பங்கேற்கும் விதமாக நாளைத் திட்டமிட வேண்டும்.

- ❖ அனைத்துப் பணிகளிலும் இப்பணி முக்கியமானதும் கூட்டொருங்கிணைப்பில் செய்யப்பட வேண்டிய பணி என்பதை நினைவில் கொண்டு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

- ❖ அனைவரும் பங்கேற்கும் நாளில் குறிக்கப்பட்ட நேரத்தில் **1 மணிநேரம் நற்கருணை ஆண்டவர் முன் அனைவரும் ஒருங்கிணைந்து அமர வேண்டும்.** பேரவை பற்றிய ஒழுங்குகள் வாசிக்கப்படலாம். தகுதியான பாடல்கள் தவிர்த்து அனைத்து விதமான வாய்ச்செபங்கள் விளக்கங்களையும் தவிர்த்து **ஆண்டவரிடம் சரணடையும் மனநிலையில் நம் குழுவில் உள்ள 24 அருட்சகோதரிகளையும் ஒவ்வொருவராக நினைவில் கொண்டு வந்து மௌனமாக ஆண்டவரிடம் அவர்களுக்காகச் செபிப்போம். இவர்களில் தகுதியானவர் என இறைவன் உணர்த்தும் நபர்களை நாம் தேர்வு செய்வோம்.**

- ❖ திருமணி முடிந்தபின் சகோதரிகள் அனைவரும் அமைதியாக ஆலயத்திலோ குழும அறையிலோ ஒன்றுகூடி வரவேண்டும். இல்லத் தலைமைச் சகோதரி ஒவ்வொருவருக்கும் வாக்குச் சீட்டையும் சிறிய உறையையும் வழங்குவார்.

- ❖ சகோதரிகள் தங்களின் பெயர் இடம் பெற்றுள்ள 24 பேர் கொண்ட குழுவிலிருந்து 4 பேரைத் தேர்வு செய்து வாக்குச் சீட்டில் எழுத வேண்டும். **சகோதரியின் பெயரோடு சபை எண் கண்டிப்பாகக் குறிக்கப்பட வேண்டும். அடியில் உங்கள் கையொப்பம் இடப்பட வேண்டும் (சபை எண்ணுடன்).**

- ❖ **நிரந்தர அர்ப்பணம் அளித்த கடைசி குழுவில் 18 பேர் இருப்பதால் அவர்கள் 3 சகோதரிகளின் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும். தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.**

- ❖ **தற்காலிக வார்த்தைப்பாட்டுச் சகோதரிகள் 24 பேரில் 2 பேரை மட்டுமே தேர்வு செய்து எழுத வேண்டும். கடைசி குழுவில் 11 பேர் மட்டுமே இருப்பதால் ஒரு சகோதரியின் பெயரை மட்டுமே எழுதவேண்டும். இதனைக் கவனத்தில் கொள்ளவும்.**

- ❖ வாக்குச் சீட்டை நிரப்பிய பின்பு அதனைக் கொடுக்கப்பட்டுள்ள சிறிய உறையில் இட்டு ஒட்டி இல்லத் தலைமைச் சகோதரியிடம் அங்கேயே ஒப்படைக்க வேண்டும்.

- ❖ இல்லத் தலைமைச் சகோதரி அனைத்து சிறிய உறைகளையும் வாங்கி உங்கள் இல்லங்களுக்கு **அனுப்பப்பட்டுள்ள 22nd General Chapter, Vote for Delegates மற்றும் தலைமையக முகவரி அச்சிடப்பட்ட பெரிய உறைக்குள் வைத்து பெரிய உறையை சகோதரிகள் முன்னிலையில் ஒட்ட வேண்டும்.**

- அனைத்தும் முடிந்தபின் வாக்குச் சீட்டுகள் கொண்ட அச்சடிக்கப்பட்ட உறையானது ***Courier Post, Speed Post or Registered Post*** **இவைகளில் ஏதாவது ஒரு தபால் வழி மார்ச் 20 ஆம் தேதிக்குள் தலைமையகம் வந்து சேர வேண்டும்.**

- தபாலில் அனுப்பும் வரை இந்த உறை இல்லத் தலைமைச் சகோதரியின் பொறுப்பில் இருக்க வேண்டும். இல்லத் தலைமைச் சகோதரிகள் கண்டிப்பாக இந்தப் பொறுப்பை யாரிடமும் ஒப்படைக்கக் கூடாது.

- ***Courier*** தபாலில் அனுப்பும் போது சரியாக வந்து சேரும் பொருட்டு பொதுச்செயலர் சகோ.டெரன்சியா அவர்களின் அலைபேசி எண் 6369998458 ஐ முகவரியின் அடியில் குறிப்பிடுங்கள்.

**இல்லத் தலைமைச் சகோதரிகள் கவனத்திற்கு:**

- இப்பணிப் பொறுப்பு முழுமையும் உங்களைச் சார்ந்தது என்பதால் எந்தக் கேள்விகளுக்கும் இடம் தராமல் சரியாகப் பணியை செய்து முடிக்க வேண்டும்.

- கடைசி நேரம் வரை காத்திருக்காமல் இதுபற்றிய தபால் கிடைக்கப்பெற்ற ஒருசில நாட்களிலேயே இப்பணியை செய்ய ஆரம்பித்துவிடுங்கள்.

- Postal Delay, விடுமுறை போன்ற பல இடையூறுகளைக் கருத்தில்கொண்டு காலம் தவறாமல் கடமையாற்ற கேட்டுக்கொள்கிறேன்.

**பொதுப் பேரவைக்கான நமது பயணத்தில்**

**ஆண்டவர் வழிநடத்த அன்னைமரியாள் துணைபுரிவார்.**

**ஆண்டவருக்கு விருப்பமானதையும் அவரை மகிழ்ச்சிப்படுத்துவதையும் மட்டுமே**

**நாம் செய்ய ஆண்டவர் நமக்கு அருள்புரிவாராக!**

**என் அன்பும் செபமும் என்றும் உரித்தாகுக!**

**அக ஒளியின் பாதையில்**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**